பதிவஞ்சல் மூலம்

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளரின் செயல்முறைகள், சென்னை—5.
முன்னிலை: திரு. கு. மனோகரன்

ந.க.எண்.இ5/31421/2013 நாள். 21.11.2014

பொருள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பணியாளர் தொகுதி – 2006 – 07க்கான தொகுதி IVல் அடங்கிய தட்டச்சர் பணி – தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் பணிநியமனம் அளிக்கப்பட்டவர்களில் பணியில் சேராமையால் காலியாக உள்ள பணியிடத்திற்கு ஒதுக்கீடு பட்டியலில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு 2011 முதல் பணியில் சேர்ந்து பணிபுரியும் தட்டச்சர்கள் – தட்டச்சர் நிலையில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடுதல்.

படித்தல் 1. இவ்வலுவலக செயல்முறைகள் எண்.இ5/112538/11, நாள் 09.08.2011

2. இவ்வலுவலக செயல்முறைகள் எண்.இ5/11352/12, நாள் 02.07.2012

2. தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியர்களின் முன்மொழிவுகள்

–o–

ஆணை

2006 – 07க்கான தொகுதி IVல் அடங்கிய தட்டச்சர் பணி தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் பணிநியமனம் அளிக்கப்பட்டவர்களில் பணியில் சேராமையால் காலியாக உள்ள பணியிடத்திற்கு ஒதுக்கீடு பட்டியலில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு 2011 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும், பார்வை 1 மற்றும் 2ல் காணும் செயல்முறைகளின்படி கீழ்க்காணும் தட்டச்சர்கள் தங்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்த மூன்றாண்டு கால பணியில் இரண்டாண்டு பணிக்காலத்தை தகுதிகாண் பருவ காலமாக அவரவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் திருப்திகரமாக முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி திரு/திருமதி. | தற்போது பணிபுரியும் இடம் | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | M. அமுதா, தட்டச்சர் | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, பொய்கைப்பட்டி, திருச்சி 621 306. | 12.08.2011 முற்பகல் | 18.08.2013 பிற்பகல் |
| 2 | S. கோகிலா, தட்டச்சர் | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, ரெட்டமங்கலம், காஞ்சிபுரம் 603 107. | 12.08.2011 முற்பகல் | 11.02.2014 பிற்பகல் |
| 3 | N. சித்ரா, தட்டச்சர் | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, அலமேலுமங்காபுரம், வேலூர் 632 009 | 17.08.2011 முற்பகல் | 16.08.2013 பிற்பகல் |
| 4 | S. ஜெயகுமார், தட்டச்சர் | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, எம்.ஆர். பாளையம், திருச்சி 621 104. | 18.08.2011 முற்பகல் | 17.08.2013 பிற்பகல் |
| 5 | J. துர்காதேவி, தட்டச்சர் | ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை – 5. | 02.07.2012 முற்பகல் | 01.07.2014 பிற்பகல் |

2) வரிசை எண் 1ல் உள்ளவர், தகுதிகாண் பருவ காலத்தில் 17.01.2013 முதல் 23.01.2013 வரை 7 நாட்கள் ஈட்டிய விடுப்பு துய்த்துள்ள காரணத்தினால், இவருக்கு 18.08.2013 பிற்பகல் தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா.

3) வரிசை எண் 2ல் உள்ளவர், தகுதிகாண் பருவ காலத்தில் 01.10.2011 முதல் 28.03.2012 வரை 180 நாட்கள் மகப்பேறு விடுப்பு துய்த்துள்ள காரணத்தினால், இவருக்கு 11.02.2014 பிற்பகல் தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

4) இவர்கள் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவிக்கப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் முதல் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவர் ஆவார்கள்.

5) இச்செயல்முறையினையும் சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டினையும் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்கும்படியும், சம்பந்தப்பட்ட தட்டச்சர்களுக்கு இவ்வுத்தரவினை சார்வு செய்யும்படியும் சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>இணைப்பு</u>
தொடர்புடையவர்களின் பணிப்பதிவேடு

21/11/14

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்.
(உரிய வழியாக)

2. சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள்

<u>நகல்</u>

1) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
திருச்சி, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள்.

2) முக்கிய ஆணைத் தொகுப்பு